17th March 1960]

SRI A. A. RASHEED: May I know Sir, the number of women to whom permits were issued? (Laughter) Will the Government issue more permits to them to reduce the number of prohibition offences?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not deny there are women who hold permits. But I do not accept that, if more women are given permits, prohibition offences would be reduced.

SRI A. VEDARATHNAM: "ஹெல்த் ரீஸன்ஸ்" என்று சொல்லி பலருக்கு பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறதே? மதுவிலக்கு என்குயரி கமிட்டியில் சாட்சியம் கொடுத்த ஸர்ஜன் ஜெனரல் எந்த வியாதியையும் ஆல்கஹால் குணப்படுத்துவதில்லை, ஆகவே எந்த வியாதியையும் குணப்படுத்துவதற்கு ஆல்கஹால் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் கொடுத்த அத்தாட்சி அந்த ரிபோர்ட்டில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஹெல்த் ரீஸன்ஸ் பேரில் எதற்கு பர்மிட் வழங்கவேண்டுமென்பதை தயவு செய்து விளக்கவேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒரு ஸர்ஜன் ஜெனரல் தன்னுடைய அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கலாம். ஆனால், அரசியல் அமைப்பு சட்டத்தின்படி ஒருவருக்கு அவருடைய உடல் நிலை காரணமாக டாக்டர் அத்தாட்சி கொடுத்து "லிக்கர்" வேண்டுமென்று சொன்னால் அதை மறுப்பதற்கில்லை.

SRI K. VINAYAKAM: Sir, may I know, on what basis these liquor permits are issued and what is the policy of our Government in respect of applications for issue of permits?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The basis is it is issued on medical grounds.

Tranquebar hospital

* 428 *Q*. —SRI C. MUTHIAH: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government propose to take over the Tranquebar hospital; and

(*b*) if so, when?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) On and from such date as may be specified in the notification constituting a panchayat union council under the Madras Panchayats Act, 1958, having jurisdiction over Tranquebar, the hospital at Porayar in Tranquebar Panchayat will stand transferred to and vest in the Government.

SRI C. MUTHIAH: பஞ்சாயத்து யூனியன் அமைப்பதை இப்பொழுது 6 மாதங்களுக்கு தள்ளிப்போடப்பட்டிருக்கிறது. அதனால் ரூரல் டிஸ்பென்சரியை ரெகுலராக மாற்றுவதும்,

[17th March 1960

ரெகுலர் டிஸ்பென்சரியை கவர்மெண்டு ஆஸ்பத்திரியாக மாற்றுவதும் தாமதப்படுகிறது. ஆகையால் பொதுவாக ரூரல் டீஸ்பன்சரியை ரெகுலராக மாற்றுவதையும், தரங்கம்பாடி ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக் கொள்வதையும் 6 மாதங்களுக்கு தள்ளிப்போட்டு காலம் கடத்தாமல், அதை உடனடியாக அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவதற்கு முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : டிஸ்பென்சரி விஷயம் வேறு. ஆஸ்பத்திரியை பொறுத்த மட்டில், இந்த மாதிரி பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்டால் அவ்வப்பொழுது மாற்றப்படும். பஞ்சாயத்து யூனியன் இதுவரையிலும் எங்கும் ஏற்படவில்லை என்று நினைக்கிறேன். பஞ்சாயத்து யூனியன் ஏற்படும் பொழுது இது மாற்றப்படும்.

SRI M. P. SUBRAMANIAM : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஏற்படுத்தப்படும் இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ளப்போகிறதா ? பஞ்சாயத்து யூனியன்களுக்கு லோகல் பண்டு டிஸ்பென்சரி, ரூரல் டிஸ்பென்சரி இவைகள் விடப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : டிஸ்பென்சரியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளாது. ஆஸ்பத்திரியை, பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டதற்கு பிற்பாடு அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

Collectors' and Police Superintendents' Conference at Ootacamund

* 429 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Law and Order position in the State was reviewed in the Collectors' and Police Superintendents' Conference held at Ootacamund during May 1959 regarding indiscipline among students;

(*b*) what measures had been proposed to put down goonda elements in towns and villages who intimidate voters during elections; and

(*c*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) General matters concerning Law and Order were discussed at the Collectors' and the Police Officers' Conference held at Ootacamund during May 1959. As the Conferences were purely departmental conferences; the Government consider that it would not be in the public interest to disclose the details of the proceedings of the Conference.

(*b*) & (*c*) Do not arise.